★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் — புரட்டாதி 24 முஹறம் 3 இதழ் 239
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10-10-83

இலங்கையில் அமெரிக்க அமைச்சர் பேச்சு:

## அ. தி. மு. க. வின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் தோழமைக் கட்சிகளும் பங்குகொள்ளும்

(சென்னை)

இலங்கைவிவகாரம் தொடர்பாக அ. தி. மு. க. ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அ. தி. மு. க.வின் தோழமைக் கட்சிகளும் கலந்துகொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள அமெரிக்க நிலையத்திற்கு ஊர்வலமாகச் சென்று, இலங்கை ஜனாதிபதியுடன் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தைக்கு ஆட்சேபனைதெரிவிக்கும்மகஜர் ஒன்றைக்கையளிக்கஅ. தி. மு. க. முடிவுசெய்துள்ளது.

இம்மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ள இக்கண்டன ஊர்வலத்தில் தமது தோழமைக் கட்சிகளும் கலந்துகொள்ளும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. பா. உ. சண்முகம் நேற்று தெரிவித்தார்.

இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குவதை நிறுத்துமாறும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் - இலங்கை ஜனாதிபதி பேச்சுவார்த்தையை கண்டித்துமே இவ்வூர்வலம் நடத்தப்படுவதாகவும் திரு. சண்முகம் தெரிவித்தார். (கு)

பர்மாவில் நேற்று நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவம்:

# தென் கொரிய 4 அமைச்சர்கள் 11 அதிகாரிகள் பலி!

## ஜனாதிபதி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்!!

## இலங்கை உட்பட 6 நாடுகள் விஜயம் ரத்து

(ரங்கூன்)

**பர்மாவில் நேற்று நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில், தென்கொரியாவின் நான்கு அமைச்சர்கள் உட்பட 15 பேர் பலியானார்கள்!**

இலங்கை உட்பட ஆறு நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு முதலில் பர்மா வந்து சேர்ந்த தென்கொரிய ஜனாதிபதி சுண் டு குவான் தலைமையிலான தூதுக் குழுவினர் கலந்துகொண்ட வைபவம் ஒன்றிலேயே இக்குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. ஜனாதிபதி குவானும் அவரது பாரியாரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

### தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்த...

பர்மாவின் தேசிய மயானத்தில் யுத்தத்தில் உயிரிழந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு தென்கொரிய ஜனாதிபதியின் வருகைக்காக அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் அங்கு காத்திருக்கையிலேயே இக் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

### தாமதித்துப் புறப்பட்டதால்....

இச்சம்பவம் நிகழ்ந்தபோது தேசிய மயானத்திற்கு மிக அருகில் தென்கொரிய ஜனாதிபதி மோட்டார் பவனியில் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார்.

ஏற்கனவே திட்டமிட்ட நேரத்தில் புறப்படாது சற்றுத் தாமதித்தே ஜனாதிபதி புறப்பட்டதாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### பலியான அமைச்சர்கள்

தென். கொரியாவின் பதில் பிரதமர், வர்த்தக பொருளாதார அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், எரிபொருள் துறை அமைச்சர் மற்றும் பர்மாவிலுள்ள தென் கொரியத் தூதுவர், ஜனாதிபதியின் தலைமைச் செயலர் உட்பட 15 பேர் இச்சம்பவத்தில் பலியானார்கள். பலியான வர்த்தக பொருளாதாரத்துறை அமைச்சர் கடந்த ஜூலையில்தான் அமைச்சராக நியமிக்கப்பட்டவர். ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகராகவும் இவர் இருந்து வருகிறார்.

பர்மா, இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, புறூணி ஆகிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டு முதலில் பர்மா வந்து சேர்ந்த தென் கொரிய தூதுக்குழுவினர், தியாகிகளின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தும் வைபவத்திலேயே முதலில் கலந்து கொள்ளவிருந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஜனாதிபதியின் ஆறுநாடுகளுக்கான வெளிநாட்டு விஜயம் ரத்துச் செய்யப்பட்டு நேற்றிரவு அவர் நாடு திரும்பினார்.

### வட-கொரியா சதி?

இச்சம்பவம் குறித்து ஜனாதிபதி சுண்-டு-குவான் கருத்துத் தெரிவித்தபோது, வடகொரியாவின் சதிமுயற்சியே இது என்று குறிப்பிட்டார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து தென் கொரியாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன், மக்களை அமைதியாக இருக்குமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

### றீகனின் தென் கொரிய விஜயம்

விரைவில் தென் - கொரியாவிற்குச் செல்லவிருந்த அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றீகனின் விஜயம் திட்டமிட்டபடி நடக்கும் என்று அமெரிக்க வட்டாரங்கள் தெரி

(8-ம் பக்கம் பார்க்க)

## மாவைசேனாதிராசா கைது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவை செயலாளர் திரு. மாவை சேனாதிராசா ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவிட்டபுரத்திலுள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு 8-45 மணியளவில் திரு. மாவை சேனாதிராசா கைது

(8-ம் பக்கம் பார்க்க)

## வ. பி. போ. சபை பஸ் கடலில் பாய்ந்தது

(வேலணை)

புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த வ. பி. போ. சபை பஸ் வேலணை பாலத்துக்கு அருகில் கடலில் விபத்துக்குள்ளானதில் பஸ் நடத்துநர் உட்பட ஐவர் காயமடைந்தனர்.

பஸ்ஸில் 24 பெண்கள் உட்பட 37 பிரயாணிகள் இருந்தனர்.

பஸ் பாதையை விட்டுவிலகியதால் விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்னை:

## அமெரிக்க செனட்டர்களுக்கு 'அமிர்' விளக்கினார்

நியுயோர்க், அக். 9

''மனித உரிமையை மதிக்கும் எந்த ஒரு நாடும் இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண உதவவேண்டும்''

இவ்வாறு தமிழர் விடுதலைக். கூட்டணியின் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று நியுயோர்க்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் அமெரிக்க செனட்டர்களையும், வெளியுறவு இலாகா அதிகாரிகளையும் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றி கலந்துரையாடினார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு இந்திய அரசு தெரிவித்திருக்கும் யோசனைகளே சிறந்த

(8ம் பக்கம் பார்க்க)

## முகமூடி கொள்ளையரின் அட்டகாசம்!

(யாழ்ப்பாணம்)

முகமூடி அணிந்த கொள்ளைக் கோஷ்டியினர், வீட்டிலிருந்தவர்களைத் தாக்கிவிட்டு, துப்பாக்கிமுனையில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்துள்ளனர்!

கொள்ளைக் கோஷ்டியினரின் தாக்குதலுக்குள்ளான விசுவலிங்கம் வேதநாதன் (41வயது) என்பவர் படுகடுகாயமடைந்து அபாயகரமானநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரதுசகோதரரான இளையதம்பி அருணாசலம் (34வயது) தாக்குதல் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாங்குளத்திலுள்ள மல்லாவியில் இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவதினம் இரவு பதினொருமணியளவில் முகமூடி அணிந்த மூன்று இளைஞர்கள் துப்பாக்கி, கிறிஸ்கத்தி, பொல்லு போன்ற ஆயுதங்களுடன் வந்து துப்பாக்கியால் மேல்நோக்கிச் சுட்டதாகவும், அப்பொழுது வேதநாதனும், அருணாசலமும்எழுந்தபொழுது கிறிஸ்கத்தியாலும், பொல்லாலும் தாக்கிவிட்டு, வீட்டுக்குள்படுத்திருந்த வேதநாதனின் மனைவியையும் சகோதரியையும் வெளியில் இழுத்து வந்து அவர்கள் அணிந்திருந்த நகைகளை அறுத்துக்கொண்டு ஓடியதாகவும் மாங்குளம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

முகமூடி அணிந்த மூவரில் இருவரின் முகமூடியைக் கிழித்துவிட்டதாகவும், அவர்களைத் தங்களுக்குத் தெரியு

[8ம் பக்கம் பார்க்க]

## சத்தியப்பிரமாணம் எடுக்காத ஆசிரியர் பதவி இழந்தார்!

(மட்டுவில்)

அரசியல் அமைப்பு ஆறாவது திருத்த சட்டத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் எடுக்கத் தவறிய ஆசிரியர் ஒருவர் தமது பதவியை இழந்துள்ளார்.

மட்டுவிலைச் சேர்ந்த எஸ் அருமைநாயகம் என்ற ஆசிரியரே சத்தியப் பிரமாணத்தைக் குறிப்பிட்ட காலத்தில் எடுக்கத் தவறியவராகும்.

கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து வந்த இந்த ஆசிரியர் எஸ். அருமைநாயகம் குறிப்பிட்ட காலத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்கத் தவறிவிட்டார். இதற்கான காரணத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

இவருக்கு வந்த மாதாந்த வேதனமும் பாடசாலைக்கு வந்து, பின்னர் கல்வித் திணைக்களத்திற்குத் திரும்பிவிட்டதாக அதிபர் திரு. கே. கந்தையா கூறினார், (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இயக்கச்சிச் சந்தியிலிருந்து அரைமைல் தூரத்தில் முகாவில் உடுத்துறை வீதியில் பாப்பான்குளம் கிழக்கெல்லையாகக்கொண்ட 50ஏக்கர் வரையிலுள்ள காணி முழுமையாகவோ அல்லது இருபிரிவுகளாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: நா, குமாரசுவாமி, யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம். 9180

---

யப்பானில் மறுசீரமைக்கப்பட்ட 38 ஸ்ரீ 6000 தொடர்-ரொயட்டா ஹை ஏஸ் வான் இரண்டு சீற், றேடியோவுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: R. E. யோசேப், குமாரசுவாமி புலவர் றோட், சுண்ணாகம். 9175

---

10'' 12'' கிறையின்டர் 10 கோஸ் பவர் மோட்டர் எல்லாம் செற்ருக விற்பனைக்குண்டு. சு. வையாபுரி, உப்புமில், மயிலிட்டி. 9174

---

''வொக்ஸ்வேகன்'' வான் 33 ஸ்ரீ - வரிசை இலக்கமுடையது. பாவனைக்குகந்த உன்னத நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் நேரடித் தொடர்பு கொள்ளவும். நியூற்ரோன் எலெக்ரிக்கல்ஸ் 141, 143, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 9167

---

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், சீமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றுக்குஅண்மையில் 4 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. வேலுப்பிள்ளை (ரெயில்வே பென்சனியர்), வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பளை. 9194

---

சங்கத்தானை இந்துக்கல்லூரிக்கு பின்பக்கமாக சிறிய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. V. குமாரசாமி, 188, கண்டி வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 9197

---

நெஷனல் பென் சொனிக்-லெட் சொனி 3900 (தன்னியக்கம்) இரண்டு பக்கமும் தொடர்ச்சியாக இயங்கக்கூடிய (100 W) ஒலிபரப்பும் சக்தியுடையது. விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- ஸ்ரார் வீடியோ கிளப், 21/5, பிறவுண் வீதி, 1-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 9193

---

புதிய 1983 மொடல் AKAI வீடியோவும், AKAI கமருவும் உடனடியாக விற்பனைக்குண்டு. அத்துடன் 3 ஏக்கர் தோட்டக்காணி திருவையாறில் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: V. குமாரசுவாமி, ''ராஜ்குமார்'', பஸ் நிலையத்துக்கு அருகாமை, கண்டி வீதி, கிளிநொச்சி. 9204

## தேவை

மேசன் வேலை, தச்சு வேலை, லொறி கிளீனர் வேலை செய்யக்கூடிய ஆட்கள்தேவை. நேரில் வரவும். க. சிவலிங்கம், 25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 9198

---

தமிழ், ஆங்கிலத்தட்டெழுத்தில் அனுபவமுடைய பெண்ணிற்கு வேலைவேண்டும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 9130, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9130

## தேவை

எஸ்-லோன் பைப் வியாபார நிலையமொன்றில் பைப்வகைகள் ஏற்றி இறக்க கூலித்தொழிலாளர்கள் உடன் தேவை. வயது 25க்கும் 35க்கும் இடைப்பட்டோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு நற்சாட்சிப்பத்திரங்களுடன் வரவும். அகதிகளுக்கு முதல் இடம் கொடுக்கப்படும். நியூற்ரோன் எலெக்ரிக்கல்ஸ், எஸ்-லோன் டெலிவரிப் பொயின்ற், 158, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம். 9177

---

Technical Directors ஆக வேலை பார்க்கத் தகுதிவாய்ந்தவர்கள் பின்வரும் தொழிற்சாலைகளுக்குத்தேவை. பின்ஸ்-கிளிப்ஸ், எலெக்றோ பிளேட்டிங் Anadising மின்விசிறி, மின் விளக்குகள், சம்பளம் ரூ. 3000/-, Business Consultants and Promoters. Ltd, 222 (76) ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 9155

## வாடகைக்கு

Austin Delivery Van வாடகைக்கு உண்டு. 2 தொன் பாரமேற்ற உகந்தது. உங்கள் தேவை எதுவாயினும் உடனே தொடர்பு கொள்ளவும். மே/பா விளம்பா இல: 9199, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9199

---

கே. கே. எஸ். வீதி, ஒளவையார் சிலைச்சந்திக்கு அண்மையில், உடன் ஹோட்டல் அல்லது வேறுவியாபாரம் செய்யக்கூடிய, தொலைபேசி, குழாய் நீர், மின்சார வசதிகளுடனான கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23541. 9201

## சேவை

மணமகன் / மணமகள் சம்பந்தப்பட்ட திருமண சேவைக்கும், காணி, வீடுவளவு சம்பந்தப்பட்ட தரகு முகவர் சேவைக்கும் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்- மல்ரி சேவிசஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9202

---

தெல்லிப்பளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குபாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்களுக்கான நாளாந்த வாகனசேவை 13ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. உடன் தொடர்பு கொள்க. ஆயர்பாடி ஜோதிட நிலையம், மடத்தடி, தெல்லிப்பளை. 9191

## குத்தகைக்கு

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைச் சந்தியில் எல்லாவித வசதிகளுடனும் ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கில வைத்தியசாலை குத்தகைக்கு கொடுக்கப்படும். எம். பி. பி. எஸ். வைத்திய கலாநிதிக்கு மிகவும் உகந்தது. உடன் தொடர்புகொள்ளவும். டாக்டர் ப. சண்முகநாதன், டிம்புல றோட், ஹற்றன். (92, Dimbulla Road, Hatton.) 9176

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9086

## பயிற்சி

வெளிநாடு செல்பவர்களுக்காக துரித மோட்டார் மெக்கானிஸம் - எலக்றிக்கல் வயறிங் - வெல்டிங் - பயிற்சிகள் 10-10-1983 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11B மொம்சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9153

---

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பைப்பெற ''ஒரு மாதகால வெல்டிங் பயிற்சி வகுப்புகள்(செய்முறை அறிமுறையுடன்) 10-10-83ல் ஆரம்பமாகின்றன. சர்வதேச புகழ்வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். யாழ். நகரில் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு தனியார் கல்லூரி. அதிபர் உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9183

---

Radio and Electronic Engineering (Trade Course) காலை வகுப்புகள் கிழமை நாட்களில் ஆரம்பம் 10-10-83. முன்கூட்டியே பதிவுசெய்ய வேண்டும். உடன் தொடர்பு கொள்க: நிர்வாகி, பொறியியல் கல்வி நிலையம், 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 9108

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சுன்னாகம் கந்தரோடையில் வசித்த நாகலிங்கம் செட்டியார் றகுபதீஸ்வரன் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/103

நாகலிங்கம் செட்டியார், குருசாமிச்செட்டியார், நாகலிங்கம் செட்டியார் சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

மனுதார்

எதிராக

1. ரகுபதீஸ்வரன் றமேஸ்
2. விஜிதா ரகுபதீஸ்வரன்
3. திருமதி தனேஸ்வரி ரகுபதீஸ்வரன் எல்லோரும் 75/6, சினீஸ்ஸ்றீற் மாத்தளை.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எதிர்மனுதார்கள் அல்லது அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முன்னே தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1981-ம் ஆண்டு ஆடி மாதம் 02-ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்

காரணம் காட்டும் திகதி 9-11-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஆணைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்

3-10-83 (9017)

## வகுப்புகள்

இந்திய தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி பெண்பட்டதாரி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நடனவகுப்புகள் ஆரம்பிக்கவுள்ளார். விரும்பியவர்கள் தமது பெயர்-வயது தரம் விலாசம் என்பவற்றுடன் 30-10-83க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9131 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9131

---

### யாழ்ப்பாணம் அக்கடமி
### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 10 - 10 - 83 - ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்

தொலைபேசி எண்: 22617
376, பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 9067

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாக மாவட்ட நீதிமன்றத்தில்

அம்பலவாணர் வீதி உடுவிலில் வசித்தவருமான காலஞ் சென்ற சில்வெஸ்ரர் இமானுவேல் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்கள் பற்றிய விடயத்தில்

மரணமெய்தியவர்

இமானுவேல் விறிஜிற்றம்மா அம்பலவாணர் வீதி உடுவில்

மனுதார்

மரணசாதன)
) இல. T161
நியாயாதிக்கம்)

எதிராக

ஏஞ்சல் மேறி யூடித்தா அம்பலவாணர் வீதி உடுவில்

எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ஆந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
பதிவாளர்

1983ம் ஆண்டு ஆனி மாதம் 9ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

காரணம் காட்டும் திகதி 19-10-83க்கு நீடிக்கப்பட்டது என்னல் வரையப்பட்டது

**ச. போகராசா**
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி

ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்
14-9-83

9110

### நிதி உதவி
(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபரும், ஆசிரியர்களும் தங்கள் ஒருநாள் சம்பளப் பணமான 1135 ரூபாவை அகதிகள் புனர் வாழ்வு நிதியத்திற்கு யாழ். கல்வித் திணைக்களத்தினூடாக அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

---

### மன்னர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
### வெற்றுப் பொருள் விற்பனை

மன்னார் ப. நோ. கூ. சங்கத்திற்கு சொந்தமான 5969 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கு இச்சங்கத்தால் முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திர படிவங்களை 22-10-83 மு.ப. 12-00மணிக்கு முன்னர் சங்கத் தலைமைச்செயலகத்திலிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். கேள்விப்பத்திரம் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 24-10-83, மு. ப. 12 மணி.

மேலும் விபரங்கள் தேவைப்படின் பொதுமுகாமையாளருடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

விபரங்களை தபால் மூலம் பெறவிரும்புவோர் சுயமுகவரியிட்டதும், தபால் முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறை ஒன்றை சங்கத்திற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**ஜே. சீ. பெனடிக்ற்,**
தலைவர்.

''வயல் வீதி'',
மன்னர்.
(தொலைபேசி 2335 மன்னர்)
9190

---

### விற்பனைக்கு

அம்பாள்-சரஸ்வதி பூசை வைப்பு முன்னிட்டு ½ இஞ்சி சமசதுரம், 1இஞ்சி சமசதுரம், 1½ இஞ்சி சமசதுரம் ஸ்ரீசக்கரம், இராஜேஸ்வரி-லெச்சுமி - சரஸ்வதி மற்றும் எல்லாவிதமான சுவாமி பென்றன்கள் கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வைணவ ஆதீனம்**
174, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
போன் நம்பர்: 22642
(9203)

---

## தேவை

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வைத்தியசாலைக்கு (சின்ன மூளாய்) கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள் தேவை.

தாதிமார் - இருவர் பெண் கண்காணி -இருவர் தொழிலாளர்-இருவர்.

வேதனம் - அனுபவத்திற்கும், தராதரத்திற்கும் ஏற்ப கலந்து ஆலோசித்து நிர்ணயிக்கப்படலாம்.

விண்ணப்பம் செய்வோர் தங்கள் கல்வித் தகைமை, அனுபவச் சான்றிதழ் பிரதிகளுடன் 25-10-83க்கு முன்னர் பொதுமுகாமையாளர் ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறைக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

பதில்
பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்
ஊர்காவற்றுறை.
9185

# மாணவர்களுக்கு முதல் வகுப்பிலிருந்து

# தொழிற் கல்வி! தமிழக அரசு முடிவு

## முதலமைச்சர் எம். ஜி. ஆர். தகவல்

சென்னை, அக். 9,
தமிழ் நாட்டில் முதலாம் வகுப்பு முதல் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு தொழில் கல்வியைப்புகட்ட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இம்முடிவு பற்றி சென்னையில் நேற்று நடந்த காந்தி அண்ணல் பிறந்ததின விழா கொண்டாட்டமொன்றில் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறியதாவது:- ''வேலையில்லாப் பிரச்னையை நீக்கும் ஒரு நடவடிக்கையாகவே இத்தொழில் கல்வித்திட்டத்தை தமிழ் நாடு அரசு ஆரபிக்கிறது. இன்று ஆறுவயதாக இருக்கும் ஒருமாணவன் பதினைந்து வருடங்களில் இருபத்தொரு வயதை அடைந்து கல்வியைப் பூர்த்தி செய்திருப்பான். எனவே அவனது வாழ்க்கையை அந்த வயதிலிருந்து நன்கு அமைத்துச் செல்ல மிக இளம் பராயம் முதல் அவனுக்கு தொழில் கல்வியை வழங்குவது இன்றியமையாதது.

தொழில் கல்வியைப் பெறும் மாணவர்கள் தமது சொந்த முயற்சிகளிலேயே தங்கி இருக்கக் கூடிய நிலையை அடைவார்கள்'' என்றார்.

திரு. எம். ஜி. ஆர். இத்தொழில் கல்வித்திட்டத்துக்கு தமிழகத்தின் தொழில் அதிபர்களையும் உதவும்படி கேட்டுக் கொண்டார். தமிழக மாநில அரசு இக்கல்வித்திட்டத்துக்கென மத்திய நிதிக் கமிஷனிடம் நிதியுதவி கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (கி)

## தி. மு. கவும் 14 கட்சிகளும் கலந்துகொள்ளாது

சென்னை, அக். 9
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்நாடு அரசினால் இம்மாதம் 12ம் திகதி கூட்டப்படவுள்ள கூட்டத்தில் தி. மு. க. வும் 14 கட்சிகளும் கலந்துகொள்வதில்லையென அறிவித்துள்ளன. (வெ)

## சவூதியிலுள்ள சாவகச்சேரி இளைஞர் உதவி

(சாவகச்சேரி)
தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுத்திட்டப் பணிக்கு சவூதி அரேபியாவில் தொழில் புரியும் சாவகச்சேரித்தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் 27000 ரூபாவை அகதிகள் புனர்வாழ்வு நிதியாகச் சேர்த்துள்ளனர்.

## ✭ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப்பெற 'அன்ரனு' கம்பங்களுக்குப் பதிலாக மரங்கள்!

### இந்திய ஆராய்ச்சியாளர் கண்டுபிடிப்பு

புதுடில்லி, அக். 9
தொலைக்காட்சி அன்ரனு ஏரியல்களுக்குப் பதிலாக மரங்களைப் பயன்படுத்தி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடலாம் என்று இந்திய ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் ஷிவ் பிரசாத் கொஸ்ரா என்பவரே இந்த ஆராய்ச்சியாளர். இவர்வாழை மரங்கள், தென்னை, பப்பாசி, மா, யூகலிப்டஸ் போன்ற மர வகைகளை 'அன்ரனு' ஏரியலுக்கு பதிலாக பயன்படுத்தி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடலாம் என்றுதமது ஆராய்ச்சியொன்றையடுத்து தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிலும், கர்நாடக மாநிலத்தின் பங்களூர் நகரத்திலும் அன்ரனுவுக்குப்பதிலாக மரங்கள் மூலமாக நிகழ்ச்சிகளைப் பெறும் தமது முயற்சிகள் வெற்றி தந்துள்ளன என்றும் டாக்டர் கொஸ்ரா தெரிவித்தார்.

தொலைக்காட்சி ஒளிபரப்புக் கோபுரத்திலிருந்து 30கிலோ மீட்டர்கள் தொலைவிலுள்ள பகுதிகளில் மரங்களை 'அன்ரனுக்களுக்குப் பதிலாக பாவித்து நிகழ்ச்சிகளைப்பெறலாம் என்றும் நாளடைவில் இத்தூரத்தை மேலும் அதிகரிக்கலாமென்றும் அவர் கூறினர். (கி)

## கணக்கெடுப்பு

(மானிப்பாய்)
இலங்கை பூராவுமுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளின் கணக்கெடுப்பு ஒன்று தற்போது நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த மதிப்பீடு சென்ற 5ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

வடபகுதியிலும் தற்போது கிராம சேவகர்கள்மூலம் இக்கணக்கெடுப்பு ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

## புதிய குருமார்கள்

(மாவிட்டபுரம்)
வசாவிளான் தோலகட்டி செபமாலைத் தாசர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த இரு குருமாருக்கு யாழ் ஆயர் குருப்பட்டாபிஷேகம் செய்துவைத்தார்.

யாழ். மரியன்னைபேராலயத்தில் நடந்த இவ் வைபவத்தில் யாழ் ஆயர். வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து கொண்டு மேற்படி குருப்பட்டாபிஷேகத்தை நடத்தி வைத்தார்

வசாவிளான் தோலகட்டி செபமாலைத்தாசர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த சங். இ. கொட்வின் கயோமார், சங். பி. ஸ்ரனிஸ்லாஸ், டொன் பொஸ்கோ ஆகியோரே புதிதாக குருபட்டாபிஷேகம் பெற்றவர்களாவர். புதிய குருமார்களின் முதற்பலிப்பூசை வசாவிளான் தோலகட்டி ஆச்சிரமத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமான மக்கள் கலந்து வணக்கத்தில் ஈடுபட்டனர்.

## தீ விபத்துக்குள்ளான விமானம் விபரீதமின்றித் தரை இறங்கியது!

டோக்கியோ, அக். 9
ஜப்பானின் ராட்சத பயணிகள் ஜெட் விமான மொன்று தரையிறங்குவதற்கு அரை மணிநேரத்துக்கு முன்னர்ஆகாயத்தில் தீவிபத்துக்குள்ளான போதிலும் விபரீதமெதுவுமின்றி பாதுகாப்பாக தரை இறங்கியது.

இச்சம்பவம் டோக்கியோவின் புதிய சர்வதேச விமான நிலையத்தில் நேற்று இடம் பெற்றது. நியூயோர்க்கிலிருந்து அவ்விமானம டோக்கியோ வந்துகொண்டிருந்தது. அதில் 303 பயணிகள் இருந்தனர்.

தரைஇறங்குவதற்கு அரை மணிநேரத்துக்கு முன்னர் விமானச்சிப்பந்திகள் அவர்களது 'கோர்ட்'டை கழற்றி வைக்கும் விமானத்தின் சிறு பகுதியிலேயே தீப்பிடித்தது. ஆயினும் அத்தீ விரைவாக பரவாது கட்டுப்படுத்த சிப்பந்திகள் உடன் செயலில் இறங்கினர். விமானமும் விரைந்து அரைமணி நேரத்தில் தரை இறங்கியது. பயணிகளும் சேதமின்றி கீழிறங்கினர். ஆனல் விமானத்தின் தீப்பிடித்த பகுதி மட்டும் முற்ருக எரிந்திருந்தது. ஏனைய பகுதிகள் நாசமாகவில்லை.

இத்தீவிபத்து அமெரிக்க கண்டத்தை தாண்டியவுடன் இவ்விமானத்தில் ஏற்பட்டிருக்குமானல் தென்கொரிய விமானவிபத்துக்குப் பின்னர் பெரும் விமான உயிர்ச்சேதமொன்று பசுபிக் சமுத்திரத்தில் நிகழ்ந்திருக்குமென தெரிவிக்கப்பட்டது. (கி)

## தமிழர் பிரச்னையை விளக்குவார்

(சாவகச்சேரி)
தென்கொரியாவின் தலைநகரில் ஆரம்பமாகியுள்ள சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் பங்கு கொள்ளும் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. என். நவரத்தினம் மாநாடு முடிவெய்தியதும் யப்பான், ஹங்கேரி, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள அரசியல் தலைவர்களுக்கு இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளைத் தெளிவுபடுத்தவுள்ளார். [த]

## ''புங்குடுதீவு ஆஸ்பத்திரிக் குறைபாடுகளை நீக்க பொதுமக்கள் உதவவேண்டும்''

(புங்குடுதீவு)
புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளினல், அங்குவார்டுகளில் தங்கிருக்கும் நோயாளர்கள்கூட வெகுவாகப் பாதிக்கப்படுவதாகவும், இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பொதுமக்கள் உதவ வேண்டுமென்றும் சமூக சேவையாளர் திரு. என். எஸ். கே. இலட்சுமணன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

''இந்த ஆஸ்பத்திரியில் ஐக்கிய நாடுகள் உதவித்திட்டத்தின் கீழ் பர்மா தேசத்திலிருந்து வைத்திய நிபுணரான எஸ். சண்முகம் கடமைக்கு அனுப்பட்டிருந்தார், இவர் இரவுபகல் பாராது சிறந்த சேவையாற்றிவந்தார். இந்த வைத்தியநிபுணர் தமது கடமைக்கால எல்லைமுடிந்து தாயகம் திரும்பியுள்ளார். அவரது இடந்துக்கு இதுவரையாரும் நியமிக்கப்படவில்லை.

''உதவிவைத்திய அதிகாரி திரு. எஸ். எஸ். இளையதம்பி தாதிகளான செல்விகள் எம். நாகமணி, கே. மருதர், பரிசோதகர்கள் திரு. பொ. கு. கந்தசாமி, செல்வி மிக்கேல் பெர்னதேத்தம்மா ஆகியோர் தங்கள் கடமைநேரத்துக்கு அப்பால்கூட நேயாளிகளுக்கு உதவிவருகிருர்கள். எனினும் சிற்றூழியர் தட்டுப்பாடு தாராளமாக நிலவுகின்றது.

''பழமைவாய்ந்த கட்டிடத்தில் இயங்கும் இந்த ஆஸ்பத்ரியில் மின்சாரவசதி இருந்தும் மின்விசிறிகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. மின்விளக்குகளும் அநேகமானவை பழுதடைந்த நிலையில் காட்சியளிக்கின்றன. மின்துண்டிக்கப்படும் நேரங்களில் மெழுகுவர்த்தி பாவிக்கப்படுகிறது. இதனல் மிகவும் கடுமையான நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஜெனரேட்டர் ஒன்று இருக்குமாயின் உதவியாக இருக்கும்.

அம்புலன்ஸ் வண்டியும் இல்லை. நோயாளிகளுக்கு வழக்கும் உணவும் திருப்தி கரமான முறையில் இல்லை. இதனல் ஏழை நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர்.

''உணவு வழங்கும் ஒப்பந்தகாரரும் நோயாளிகளுக்கு வழங்கும் உணவில் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

''தொலைபேசி வசதி இருந்தும் அடிக்கடி பழுதடைகின்றது.

''கட்டாக்காலி நாய்களும், கால் நடைகளும் இரவுநேரங்களில் வட்டமிடுகின்றன. அடிக்கடி வாட்டுகளுக்குள்ளும் புகுந்துவிடுகின்றன. இதனல் நோயாளிகள் பீதியடைகின்றனர். இந்த ஆஸ்பத்திரிக்கு போதிய பாதுகாப்பு இல்லை. சுற்றுமதில்கள் கூட பூர்த்தியடையாத நிலையில் உள்ளது.

முற்றிலும் அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் வசதி படைத்த பொதுமக்கள் வைத்தியசாலைக்கு பரந்த நோக்கத்தோடு உதவவேண்டும்''. (மா)

## பஞ்சாப்பில் ஜனதிபதி ஆட்சி பிரகடனம்:

# மொரார்ஜி தேசாய் மகிழ்ச்சி!

### நாடு பிளவுபடுவதை அனுமதிக்கக் கூடாதென்றும் வலியுறுத்து!

புதுடில்லி, அக். 9,
பஞ்சாப் மாநிலத்தில் ஜனதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டிருப்பது குறித்து இந்தியாவின் முன்னள் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஜனதாக்கட்சி உறுப்பினர் மத்தியில் அவர் நேற்று உரையொன்றை நிகழ்த்திய போதே இவ்வாறு மகிழ்ச்சி தெரிவித்தார்.

''பஞ்சாபில் வழிபாட்டு ஸ்தலங்களில் பதுங்கியிருந்து தீயசெயல்களில் தீவிரவாதிகள் இறங்குவதை அனுமதிக்கக் கூடாது. அத்துடன் இந்தியவைப் பிரிக்க முயற்சிக்கும் எந்த ஒரு சக்தியையும் முறியடிக்கவேண்டும். பஞ்சாப் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் நாட்டுநலனுக்கு கேடுவிளைவிப்பவை'' என்று திரு. மொரார்ஜிதேசாய் தமது உரையில் மேலும் கூறினர்.

இதேவேளை பஞ்சாப்மாநிலத்தில் மத்திய அரசு சட்டசபையை தற்காலிகமாகக் கலைத்து விட்டுஜனதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்தியிருப்பதை இந்தியாவின் பல எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. பிரிவினைவாதத்தைக் கொண்ட பஞ்சாப் சீக்கிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் முறியடிக்கப்பட வேண்டுமென்று அவை ஏகோபித்துக் குரல் கொடுத்துள்ளன.

இந்திரா காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஸ்டீபன் பஞ்சாப் நிலவரங்கள் பற்றிக்குறிப்பிடுகையில், அங்குள்ள சில எதிர்கட்சிகள் தீவிரவாதிகளின் வன்முறை நடவடிக்கைகளுக்கு அரசியல் ரீதியில் ஆதரவு வழங்குகின்றன வென்றும் அவ்வாறு அவை ஆதரவளிப்பது வகுப்புவாதத்தை மேலும் கிளறிவிடவா? அல்லது காலிஸ்தான் பிரிவினைக்கோரிக்கையை மேலும் தீவிரப்படுத்தவா? என்பது பற்றி எதுவும் தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப்பில் ஜனதிபதி ஆட்சி பிரகடனப்பட்டுள்ளதை யடுத்து பஞ்சாப்மாநில ஆளுநராக மேற்குவங்காள ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பிரதமர் திருமதி காந்தியின் நம்பிக்கைக்கு உரியவர். இவருக்கு உதவியாக வேறு நான்கு உயர் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனதிபதி ஆட்சியின் கீழ் இம்மாநிலத்தில் இராணுவ, பொலிஸ் படைகளுக்கு விசேட அதிகாரங்கள் கணிசமானளவு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இங்கு மேலதிகமாகவும் பாதுகாப்புப்படைகள் சேவைக்கு அனுப்பப்பட்டுள்ளன. [கி]

## மின்சாரம் இல்லை

(கரவெட்டி)
கரவெட்டி இராஜ கிராம வீதி நீண்டநாட்களாக இருள் மயமாகவுள்ளது. இதுதொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையினல் அயலிலுள்ள கிராமங்களில் வேலை செய்து பிழைத்து நேரம்பிந்தி வீடு திரும்புகின்ற இக்கிராம மக்கள் பாதிப்படைகின்றனர்.

## வசதிக்கட்டண ஆசிரியர் நேர்முகப்பரீட்சை

(வவனியா)
வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை நேற்று நடைபெற்றது.

வவனியாவில் பிரதேசக் கல்வித்திணைக்கள மேலிடத்து உத்தரவின்படி இங்கு தற்போது பணிபுரியும் வசதிக்கட்டண ஆசிரியர்கள் அனைவருமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (அ)

### மணிவாக்கு

அறிவென்னும் ஆற்றில் ஞானத்தை
இழந்துவிட்டோம்;
தகவல் திரட்டுவதில் அறிவைக்
கைவிட்டு விட்டோம்!

—ரீ. எஸ். . எலியட்

## நமது நோக்கு

## பொறிபாலங்கள் போதும்!

"ஐ. நா. இலங்கையின் ஒற்றுமையைப் பாதுகாக்கவே கடமைப்பட்டுள்ளது'' என்று ஐ. நா. செயலாளர் நாயகம் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஹமீட்டுக்கு ஆறுதல்மொழி அளித்திருக்கிறார்.

எங்கே? பொதுச்சபையில் அல்ல. தனிப்பட்ட சந்திப்பிலே! இச்செய்திகொழும்பு தினசரி ஒன்றில் கொட்டை எழுத்தில் நடனமாடுகின்றது; இன்னும் பொறிபாலம் அமைக்கலாம் என்ற எண்ணம் போலும்''.

குறிப்பிட்ட சந்திப்பில் அமைச்சர் ஹமீட் இந்தியாவின் தமிழ்நாடு மானிலத்தின் அரசியல் கட்சி ஒன்று சிறு வள்ளங்களில் வந்து இலங்கையை ஆக்கிரமிக்க எத்தனித்தது என்றும், இவ்வித கேலிக்கூத்து, அங்கு இன்று சாதாரணமாக நடைபெறுகிறது என்றும் ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு எடுத்துரைத்திருக்கிறார்.

ஐ. நா. வின் முதல் அதிகாரி மட்டுமல்ல அங்கு கூடியிருக்கும் பிரதிநிதிகள் அனைவருக்கும் இவ்வித கேலிக்கூத்துக்கள் புதுமையானவையல்ல; இருந்தும் இந்த ரகசிய தகவல், அங்கு வந்திறங்கியிருக்கும் தமிழ்நாட்டின் ஒரு கோடி மக்களின் கையெழுத்து மகஜராகிய குண்டுப்பார்சலுக்கு இலங்கை அமைச்சர் போட்ட குண்டென்பதை ஐ. நா.பொதுச்செயலாளர் நேரில் புரிந்திருப்பார்.

எது எப்படியானாலும் இலங்கையில் ஒற்றுமை பேசப்பட்டு செயற்படத் தொடங்கியது நாட்டுக்கு சுதந்திரம் தபால் மூலம் உவைற்ஹோல் தயாராக்குகிறது என்ற செய்தி கேட்ட கணமே!

அவசரம் அவசரமாக பொருத்தப்பட்ட ஐ.தே. கட்சி பிரதமர் டீ. எஸ். செனநாயக்காவின் தலைமையில் திறமை வாய்ந்த பல்வேறு இன, மத சமூகத்தவரைக் கொண்டது; தேசிய ஒற்றுமையே அதன் தாரகமந்திரம்; ஆனால் திறமையும் அனுபவமும் வாய்ந்த 'தேசபிதா' எவ்வழியை நாடுகிறாரென்பதை முதல் அறிந்துவெளியேறியஅமைச்சர் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா. பொறிபாலம் உடைந்த முதற் சம்பவம் இது.

தமிழ் அங்கத்தவர்கள் அவருடைய ஆட்சியில் ஐக்கியமும் இல்லை, தேசியமுமில்லையென்பதைக் கொஞ்சம் தாமதித்தே அறிந்தனர்; வெளியேறினர். கப்பல் தாழும் போது எலிகள் ஓட்டமெடுக்குமென்பது முதுமொழி.

அதற்குப்பின் ஆட்சிக்கு வந்த 'சிறிலங்கா சுதந்திரம்' தனிச்சிங்களச் சட்டத்தால் தமிழ்மக்களின் சுதந்திரத்தை வெளிவெளியாகப்பறித்தது; சிறிலங்காவென்பது சிங்கள மக்களைக் கருதினால் சுதந்திரம் அவர்களுக்கே உரியது.

எனவே ஒற்றுமைஎன்றோ அல்லது தார்மீகமென்றோ மக்களைச் சொற்களால் வசப்படுத்தி, செய்கைகளால் ஏமாற்றும் தந்திரம் கடந்த ஆடிமாதக் கொடுமைகளில் அம்பலமாயிற்று.

இதனை மக்கள் இன்னும் புரியவில்லையென்பது மீண்டும் பேசப்படும் ஒற்றுமைத்திட்டங்கள் விளக்கும்

இலங்கையில் மட்டுமல்ல, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் ஆங்கில ஆட்சி உருவாக்கிய செயற்கை ஒற்றுமை சுதந்திரத்தின் பின் சுயரூபம் எடுத்திருக்கின்றது; இதனால் நாம் பிரிவினை தான் ஒரு மருந்தென்று கொள்ளவில்லை நாட்டின் 'மஜோறிற்றி' ஆட்சி முறையின் பலவீனத்தையே விளக்குகின்றோம்.

ஐரோப்பிய நாட்டுப் பிரச்னைகள்வேறு; ஆசிய நாட்டுப்பிரச்னைகள் வேறு. பாகிஸ்தானின் சிற்பி கூறிய உதாரணம் மிகச்சுவையானது இந்தியாவைக்கூறு போட்ட ஜின்னாவைப் பற்றி கருத்துபேதங்கள் பல உண்டு: ஆனால் அவருடைய மிகத் தெளிவான இவ்வாதம் குழந்தைக்கும் புரியும்.

''பசுவைத் தெய்வமெனமதிக்கும் இந்துக்களையும், அதன் இறைச்சியை உண்ணுகிறமுஸ்லிம்களையும் ஒற்றுமைப்படுங்கள் என்று சொல்லி, பிரிட்டிஷார் இங்கு தங்கள் ஆட்சியை நீடிக்கின்றனர்; இந்த ஒற்றுமை நடவாத காரியமென்பது அவர்கள் நன்கறிவர்; பிரித்துவிட்டுவெளியேறுங்கள் என்பதே எனது பதில்''.

எமது நாட்டுக்குப் பொருத்தமான பகுதி அவர் விடுத்த பிரிவினைக் கோரிக்கை அல்ல; எமது வாதத்துக்கு அது பொருத்தமல்ல; இன்று தமிழரின் ஆபத்தான நிலை ஜின்னா விடுத்த பிரிவினைக் கோரிக்கையிலே மோகம் ஏற்படுத்தும்; ஆனால் விடயம் அதல்ல.

ஒன்றுபடா உள்ளங்களை அவசரச்சட்டத்தாலும், ராணுவ பலத்தாலும் ஒற்றுமைப் படுத்த எடுக்கும் முயற்சிகளும் திட்டங்களும் அக்கினிக்கே ஆகுதியாகுமென்பதை நாம் இன்று கண்ணாரக்கண்டு கொண்டோம்.

இலங்கைத்தமிழர் இலங்கையின் பழங்குடிகள், இலங்கையின் சுதந்திரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அரும் பாடுபட்டவர்கள். அவர்களை ஒருகையால் அடக்கியும் ஒடுக்கியும் மறுகையால் ஒற்றுமைச்கிழுத்தும் நடத்திவந்த ஆட்சி இன்று நாட்டின் சுதந்திரத்துக்கே அபாயம் ஏற்படுத்தியிருக்கிறது

மெய்யான ஒற்றுமையென்றால் தமிழருக்கு தங்களைப் பாதுகாக்கும் சுதந்திர ஆட்சி, நாட்டின் பாதுகாப்புக்கும் அதுபோன்ற அகில இலங்கை விவகாரங்களுக்கும் குந்தகம் ஏற்படாத வகையில் வழங்கப்பட வேண்டும்.

ஒருமொழி, ஒரு மதம், ஒரு இனம் என்கின்ற மயக்கத்தில் ஆட்சி தொடருமானால் ராமாயணத்தின் உட்பொருள் இன்னும் புரியவில்லையென்பது அர்த்தம்.

# தமிழில் சாதனைகள் நிகழ்த்தி அரும்பணியாற்றிய கிறீன்!

**"இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலத்தில் சிந்தித்து, பேசி, அதுவே அறிவுக்கு அறிகுறியெனவும், பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி தாய்மொழியில் கற்பித்தல் போதுமென நினைத்து நிம்மதியாக ஆங்கில நிழலிலே உறங்கிய தமிழ்ச் சமுதாயத்திலே, ஆரம்பக் கல்விமட்டுமல்ல, அறிவியற்கலையை— மருத்துவக் கல்வியை தமிழ்மொழியில் கற்பிக்கலாமெனத் துணிந்து கூறி அதனைச்சாதனையிலும்காட்டி, யாழ்ப்பாண மக்கள் என்றுமே மறக்க முடியாத மனிதரான மறைந்தும் மறையாமல் வாழும் அமரர் டாக்டர் சாமுவேல் பி. கிறீன் அவர்களின் நினைவு தினம் இன்று."**

அமெரிக்க நாட்டிலிருந்து இலங்கைக்கு 1816 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் முதன்முதலாக கிறிஸ்தவத் திருப்பணி விடையாளர்கள் வந்து சேர்ந்தனர். இவர்கள் யாழ்ப்பாணத்தைத் தமது திருப்பணிக்களமாகத் தேர்ந்தெடுத்தனர். தெல்லிப்பளையில் தமது திருபணியைத் தொடங்கினர்.

இங்கிருந்து பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, மானிப்பாய் உடுவில் ஆகிய இடங்கலில் சமயத் துறையிலும் கல்வித்துறையிலும் ஈடுபட்டு அயராது திருப்பணியாற்றினர்.

இத்துறைகளில் மட்டும் ஈடுபடுவதில் திருப்தியுறாது, மருத்துவத்துறையிலும் பணியாற்ற வேண்டுமென்று ஆவல்கொண்டனர். தமதுநோக்கை அமெரிக்கமிஷன் சங்கத்திற்கு அறிவித்தனர். அவர்கள் இவ் வேண்டுகோளை மனமுவந்தேற்று, 1819ஆம் ஆண்டில் மருத்துவ ஊழியரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினர்.

பலரின் பணியைத் தொடர்ந்துநடத்த டாக்டர் சாமுவேல் பி. கிறீன் தம்பதிகள் 1847 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வந்து சேர்ந்தனர். டாக்டர் கிறீன் யாழ்ப்பாணத்தில் அடியெடுத்துவைத்த இருவாரங்களுள் அன்னாரின் பெயரும் புகழும் பரவக்கூடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

முத்துத்தம்பி என்னும் பெரியார் ஒருவர் கொடிய வயிற்று வலியால் தவித்துக் கொண்டிருந்தார். இவருக்கு மருத்துவஞ்செய்த சுதேச வைத்தியர் நம்பிக்கையிழந்து கைவிட்டனர். டாக்டர் கிறீனின் வருகையைக் கேள்விப்பட்டு முத்துத்தம்பியைக் கொண்டு வந்தனர். டாக்டர் முத்துத் தம்பிக்கு அறுவை சிகிச்சை செய்தார். நோயாளி குணமடைந்தார். கிறீன் வைத்தியர் செய்த முதல் அறுவை சிகிச்சை இதுவே. இதனால் அவரின் பெயரும் புகழும்பரவியது.

1848 இல் டாக்டர் கிறீன் தமது மருத்துவமனையை மானிப்பாய்க்கு மாற்றினார். இங்கிருந்து சிறந்த பணியாற்றினார். மருத்துவக் கல்வியை தமிழில் முதன் முதலாகக் கற்பிக்கத் தொடங்கினார். மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவர் ஆற்றிய பெரும்பணிகளின் நினைவுச் சின்னமாக இன்னும் 'கிறீன் நினைவுமருத்துவ மனை' மானிப்பாயில் சிறந்த பணியாற்றி வருகிறது. டாக்டர் கிறீன் இங்கு ஆற்றியசிறந்த தொண்டை இம் மருந்தக ஊழியர் தளராது செய்துவருகின்றனர். தென் இந்திய திருச்சபை, யாழ்.பேராயத்தின் மேற்பார்வையில் இன்று இம்மருத்துவமனை பணியாற்றி வருகிறது.

### பிறப்பு

அமெரிக்காவில் ''கிறீன் ஹில்'' என்னும் இடத்தில் வாழ்ந்த உவில்லியம் ஈ.கிறீன் தம்பதிகளுக்கு 1822 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10ஆம் நாள் சாமுவேல் கிறீன் பிறந்தார். இவருக்குப் பத்து சகோதரர்கள் உண்டு. தமது 11ஆம் வயதில் தாயை இழந்தார்.

சாதாரண எழுத்து வினைஞராகத் தம்வாழ்க்கையை ஆரம்பித்தார். ஓய்வு நேரத்தில் நேரத்தை வீணாக்காமல் பல நூல்களை வாசித்தும் படித்தும் வந்தார். 1841ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நியூயோர்கில் உள்ள மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து ஊக்கமாகக் படித்தார். தமக்குக் கிடைத்த ஒய்வு நேரங்களில், மருத்துவர் ஆற்றிவந்த அறுவை சிகிச்சைகளைக் கவனித்தும் வேறுபல மருத்துவப் பணிகளைக் கரிசனையுடன் படிப்பதிலும் ஈடுபட்டார். காலப்போக்கில் இத்துறையில் முன்னேறத் தொடங்கினார்.

அமெரிக்காவில் மருத்துவப் பட்டம் பெற்றபின், யாழ்ப்பாணத்தில் பணிபுரிய மகிழ்ச்சியுடன் வந்து சேர்ந்தார். இங்குவரமுன் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கிவிட்டார். தாம் பணிசெய்யும் மக்களுடன் கூடி வாழ்ந்து அவர்களின் மொழியை அறிவதே தமது பணிக்குப் பேருதவியாயிருக்கும் என்ற நம்பிக்கையுடன் தமிழை ஆவலுடன் கற்றார்.

### தமிழில் ஆர்வம்

டாக்டர் கிறீன் அமெரிக்க நாட்டவராயிருந்த போதிலும் தமிழைப் படித்து அறிவியற் கலைகளைத் தமிழில் பரப்ப வேண்டுமென்ற ஆர்வங்கொண்டு உழைத்தார். மேல் நாட்டு மருத்துவக் கலையைத் தமிழ்மூலம் போதித்து நல்லறிஞர்களை இந்நாட்டிலும் உருவாக்கவேண்டுமென்ற தணியா ஆர்வத்துடன் பணியாற்றினார்.

அன்று அறிவியல் நூல்கள் தமிழில் ஆக்கப்படவில்லை. கலைச்சொற்றொகுதி இல்லை. 'தமிழில் இது முடியுமா?' என்று அறிஞர் சிந்தித்த காலத்தில், தமிழில் எல்லாம் முடியுமென்பதைச் சாதித்துக் காட்டினார் டாக்டர் கிறீன்.

கலைச்சொற்களைத் தமிழில் அமைத்தார். உறுதியான விதிகளை அமைத்துப் புதிய பதங்களை உற்பத்திசெய்தார்.

தமிழ் நாட்டிலும டாக்டர் கிறீன் அவர்களின் சேவை நன்கு மதிக்கப்பட்டது. 'தமிழில் அறிவியல்' பற்றிய விடயங்களில் இறுதி முடிவு கூறுந் தகுதிவாய்ந்த வல்லுநராக மதிக்கப்பட்டார். தமிழில் அறிவியல் தந்த 'பிதா' என்று தமிழ் கூறும் நல்லுலகம் இவரைப் பாராட்டியது.

கிறீனின் தமிழார்வத்தை திருப்பணியின் திறத்தை அவரை அறிந்தோர் என்றும் மறக்கமுடியாது. தாய்மொழி மூலம் கல்வி கற்பித்தலே இயற்கை முறையெனச் சிந்திக்காத காலத்திலேயே, தமிழ் மொழியைக் கற்று, 'எல்லாந் தமிழ்'மயமாக நடத்த முடியுமெனக் கூறியதோடு அமையாது, அதனைச் சாதனையிலும் காட்டினார்.

மானிப்பாயிலிருந்து அமெரிக்காவிலுள்ள தமது நண்பர் ஒருவருக்கு கிறீன் வைத்தியர் எழுதி கடிதத்தில் 'இப்பொழுது எல்லா விடயங்களுந் தமிழிலே நடைபெறுகின்றன. மருந்துக்களின் பெயர், நோய்களின் பெயர், இடாப்புகள், கணக்கு விபரங்கள், மருந்துக்குறிப்புகள் எல்லாந் தமிழிலே எழுதப்படுகின்றன'' என வெற்றிப்பூரிப்புடன் எழுதினார்.

இவர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தாலும், யாழ்ப்பாணத்து மக்கள் தேசியப்பற்று அற்றவர்களாய்த் தமது நடை, உடை பாவனைகளில் மேனாட்டவரைப் பின்பற்றுவதைக் கண்டு, மனம்வருந்தி 1864ஆம் ஆண்டிலேயே பின்வருமாறு எழுதியது. ''வேட்டி காற்சட்டையாகவும், சால்வைமேற்சட்டையாகவும், தலைப்பாகை தொப்பியாகவும் தாவரபோசனம் மாமிசபோசனமாகவும்குடிசை வீடாகவும் மாற்றமடைகின்றன எனவே நான் எண்ணுகிறேன்'' என்பதே.

டாக்டர் கிறீன் அவர்கள் தமிழ்மொழிக்குச் செய்து வந்த தொண்டினை, அன்று

(8ம் பக்கம் பார்க்க)

## அருள் திரு.டி.ஆர். அம்பலவாணர்

## நின்னடி போற்றுதும்

சொற்பத மாமருட் தோற்றமே நாடித் துதிப்பவரும்
அற்புதச் சோதி அருளே நினைவந் தடைந்தவர்க்கோர்
கற்பகக் கொம்பேநற் கல்வி கலைஞர்சீர் காட்சி தரும்
பொற்பே யருட்தாயே போற்றுவது முன்னருட்
பொன்னடியே

ஏற்றம் பெறவே இசையை வகுத்துயர் ஏழிசையாம்
தோற்ற மளித்துத் தொடந்ததனோ டொத் திலங்குகின்ற
ஆற்றற் திறனர் அருளேநன் வீணைக் கதிபதியே
போற்றிநற் போற்றி புகலமெக் கெம்தாய் நின்பொற்
பதமே

— தென்புலோலி கு. பெரியதம்பி

★

## தாயே அருள்வாய்

மனம் நிறைந்து அறிவருளி, கலையும் ஊட்டி
தினம் நினைந்து ஜகமெல்லாம் போற்றும் தாயே!
குணம் சிறக்க, குவி செல்வம் வறுமைபோக்க
மணம் சுரக்கும் மலர்த்தாயே! பணிவோம் அருள்வாய்!!

—மேலைப்புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி

★ கலைஞர் கருணாநிதி வற்புறுத்துகிறார்:

# "இலங்கைத் தமிழரைக் காக்க ஐ. நா. அமைதிப் படை வேண்டும்!"

இலங்கைத் தமிழர்களைக் காக்க ஐ. நா. படையை இலங்கைக்குஅனுப்பவேண்டுமென்ற கோரிக்கையில் நீதியும், நியாயமும் இருக்கத்தான்செய்கிறது!

தமிழகத்தில் இந்தக் குரலை எழுப்பி, மத்திய அரசை மிகக் கடுமையாக வற்புறுத்தியவர் கலைஞர்!

இந்திய அரசு வாய்மூடிக் கொண்டு இலங்கைக்கொடுமைகளைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்று குமுறியவர் அவர்!

இந்திய அரசு இந்த விஷயத்தைக் கைவிரித்துவிட்ட பிறகு, "நாமாவது நமது குரல் ஐ நா.வுக்கு எட்டும்படி செய்யவேண்டும்" என்று தமிழகத்து மக்களின் கோரிக்கைகளைக் கலைஞர் கையெழுத்துக்களாக அனுப்பிவைத்தார்.

ஐ. நா. சபை அமைதிகாக்கும் தனது படையை அனுப்பிவைப்பது ஒன்றும் புதியதல்ல என்பதனைக் கலைஞர் நன்கு தெரிந்துவைத்திருக்கிறார்.

அறிஞர் அண்ணாவின் உண்மைத் தம்பி ஒருவர் மீண்டும் இப்போது இலங்கைத் தமிழர்களுக்காக ஐ. நா.விடம் கோரிக்கைவிடுக்கிறார்!

## ஐ.நா. படை வேண்டும்

தமிழகத்தில் இருக்கும் தீவிரவாதப் போக்குடைய இலங்கைத் தமிழ் இளைஞர் உமா மகேஸ்வரனும் இலங்கையில் தமிழர்களைக் காக்க ஐ. நா. படை அனுப்பப்படவேண்டும் என்கிறார்!

இவரைத் தமிழக சஞ்சிகையொன்று பேட்டிகண்டுள்ளது. "இலங்கையிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள் என்று கூறப்படுவது சரியல்ல. மிகுந்த சிரமத்துக்குப் பிறகே உமா மகேஸ்வரனைச் சந்திக்கமுடிந்தது" என்ற குறிப்போடு அவரது பேட்டியை வெளியிட்டுள்ளது.

"இந்திய அரசு என்னசெய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்" என்று கேட்டதற்கு உமா அளித்த பதில்:

'முதல்காரியமாக ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பிப் படுகொலைகளை நிறுத்தச் செய்ய இந்திய அரசு முனைப்பாகச் செயல்படவேண்டும்! இந்திய ராணுவம் செல்வதை நாங்கள் விரும்பவில்லை?"

○

## கொந்தளிப்பு குமுறல்

இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக ஐந்து கோடி மக்கள் வாழும் முழுத் தமிழகமும் கொந்தளித்துக் குமுறிய போது, அவர்களின் உணர்ச்சிகளுக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். நிதானமாக மதிப்பளித்தார்!

தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிகளோடு, மத்திய அரசைக் கலங்கச்செய்து, அதன்மூலம் பெரியதொரு தீர்வை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணம், அவர் உள்மனதுக்குள் இருந்ததே இவ்வித நிதானப்போக்குக்குக் காரணமாகவும் இருந்திருக்கலாம்.

அத்தோடு அவர் அரசியலில் பெற்றுவரும் முதிர்ச்சியும், அனுபவமும் அவர் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி நிதானத்தோடு செயல்படவைத்திருக்கலாம்!

எதிர்காலத்தைச் சிந்தித்து, இந்திராவின் எண்ணங்களைப் புரிந்தும், அதற்கேற்றபடி அவர் நடந்துமிருக்கலாம்!

எப்படியோ, இலங்கைத் தமிழர் பிரச்னையில் அவர் பங்கும், கலைஞர் பங்கும் என்றும் எப்பொழுதும் இலங்கைத் தமிழ் மக்களால் என்றும் நன்றியுடன் மறக்கமுடியாதவை!

இதே நேரத்தில்—

இலங்கைப் பிரச்னையில் எம். ஜி. ஆர். காட்டும் நிதானப் போக்குக்கு நேரிடையாக உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டார் அமைச்சர் காளிமுத்து!

## எம். ஜி. ஆருக்குக் கிடைத்த ஒரு உணர்ச்சி முத்து காளிமுத்து

வேளாண்மைத்துறை அமைச்சராக இருக்கும் காளிமுத்துவுக்கு இந்தியா, இலங்கைத் தமிழர்களைக் காக்க ராணுவத்தை அனுப்பவில்லை என்ற மனக்கொதிப்பு-

"நாடு பிடிக்கவா ராணுவத்தை அனுப்பச் சொல்லிக் கேட்கிறோம்? இவ்வளவு கொடுமை நடந்திருக்கிறது! கொடுமைக்கு ஆளானவர்கள் நம் இனந்தவர்கள். அவர்களைக் காக்கவேண்டியது நமது கடமையல்லவா? மத்தியஅரசு ராணுவத்தை அனுப்பாத வரை தேசியஒருமைப்பாடு ஒரு கேலிக்கூத்து.

"வங்கதேசத்துக்கு என்ன நியாயமோ அதுதான் இலங்கையிலும் நியாயம் என்பதை இந்திரா உணரவேண்டும்!" இப்படி அவர் பேசியிருக்கிறார்.

○

இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்திய (இடது) கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி இப்படி கருத்துத் தெரிவிக்கிறார்.

"இலங்கையில் இந்திய ராணுவம் தலையிட்டால், அது இந்தியாவுக்கு பேரழிவாகமுடியும். திருகோணமலையில் பலம் வாய்ந்த தளத்தை அமெரிக்கா பாவிக்கும் என்பது உறுதி. இந்நிலையில் இந்தியக்கடற்படை அங்குசெல்வது அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும். அமெரிக்காவின் கடற்படைக்கு இந்தியக் கப்பல்கள் எளிதில் இரையாகக்கூடும். இந்திய ராணுவம் தலையிட்டால், இலங்கை அரசாலும், சிங்களவர்களாலும் இலங்கைத் தமிழருக்கு மேலும் துன்பம் நேரும். இலங்கையில் தற்போதுள்ள நிலையை 1971ல் பங்களாதேஷ் (கிழக்குப் பாக்கிஸ்தான்) நிலவரத்தோடுஒப்பிடக் கூடாது!"

## "இராணுவம் தலையிட்டால் இந்தியாவுக்கு அழிவு!"

### — ராமமூர்த்தி

இலங்கைப்பிரச்னைக்கு ராமமூர்த்தி தெரிவிக்கும் தீர்வு:

"இலங்கையில் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களிலும், சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களிலும் உள்ள பொதுவானவர்கள் ஒன்றுசேர்ந்து ஜெயவர்த்தன அரசைத் தூக்கி எறிந்துவிட்டு, ஒரு ஜனநாயக அரசை நிறுவவேண்டும்! இப்போதுள்ள பிரச்னையைத் தீர்க்க இதைவிட வேறுவழியில்லை!"

## ஒரே தாய் பிள்ளைகள்

பகுத்தறிவுத்தந்தை ஈரோடு பெரியாரின் வாரிசாக திகழ்பவர் திராவிடர்கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி! இலங்கைத்தமிழர் பிரச்னைக்காகத் திராவிடர் கழகம் தமிழகத்தின் பல பகுதிகளில் கண்டனக்கூட்டங்கள் நடத்தியது.

திருச்சியில் நடந்த கூட்டமொன்றில் வீரமணி பேசுகையில் சொன்னார்.

"இலங்கைத் தமிழர்படும் துயரம்சொல்லிமாளாது. எதிர்க்கட்சியில் இருந்தாலும் எந்தக் கொடி பிடித்தாலும், நமக்கு எந்தத் தலைவரானாலும், தமிழ் தாய் வயிற்றில் பிறந்தவர் என்ற உணர்வு வந்தாக வேண்டும்!

"அண்ணாவின் உண்மைத் தம்பிகள் யார் என்பதைத் தமிழ்ச்சமுதாயம் உணர்ந்து விட்டது! கலைஞரும் பேராசிரியரும் பதவிகளைத் துறந்தார்கள் எம். ஜி. ஆரும் அவரது ரத்தத்தின் ரத்தங்களும் பதவிகளைத் துறப்பார்களா? அவர்களுக்கு அந்தத்தெம்போ திராணியோ இல்லை!

## எம். ஜி. ஆரின் சாதனை

"கம்யூனிஸ்ட் தலைவர் ராமமூர்த்தி முற்போக்கு முத்திரை குத்திக்கொண்டு, தமிழர் முதுகிலும் குத்தப்பார்க்கிறார்! அனைத்துக்கட்சித் தலைவர்கள் டில்லிசென்று மனுவொன்றை இந்திராவிடம் கையளித்தார்கள்! அந்த மனுவில் ராமமூர்த்தி கையெழுத்திடவில்லை! கையெழுத்து போடாதவரையும் அழைத்துச் சென்றது எம். ஜி. ஆரின் தனிப்பெரும் சாதனை!

**தொகுத்துத் தருபவர்: ஈ. கே. ஆர்.**

"குஞ்சைக்காப்பாற்ற உண்மையான தாய்க்கோழி வல்லூறுடன் சண்டையிடும்! ஆறறிவு படைத்தவர்கள் நாம்! இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தின் குஞ்சுகள்!"

(இன்னும் வரும்)

## தமிழகத்தின் இதயக் குமுறல் - 13

அவர் எடுத்துக்காட்டுகிறார்:

"பாலஸ்தீனப் பிரச்னையில் ஐ. நா.வின் அமைதிப்படை 1949 ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டு வரையில்- அதாவது இஸ்ரேல்-லெபனன் பிரச்னையிலும், இஸ்ரேல்-சிரியா மோதலின்போதும், இஸ்ரேல்-எகிப்து போரின் போதும் 1958 ஆண்டிலும் அனுப்பப்பட்டுள்ளது.

"1947 ஜூலை முதல் 1951 ஏப்ரல் வரையில் இந்தோனேஷியாவில் உள்நாட்டுப் பெருங் கலவரங்கள் தோன்றியபோது அங்கு அமைதிப்பணியைக் கவனிக்க ஐ. நா. அமைதிப் படையொன்றை அனுப்பியது.

"1953ம் ஆண்டு, ஐ. நா. அமைதிப் படையைக் கொரியாவுக்கு அனுப்பியிருந்தது.

"1960ல் காங்கோவில் சண்டை மூண்டபோது ஐ.நா. வின் படை அங்கு (இருபதினாயிரம்) அனுப்பிவைக்கப்பட்டது."

இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டிக் கலைஞர் 'இலங்கைக்கு அமைதிப் படையை அனுப்பக் கோருவது அருமையான யோசனை என்பதை ஏற்றுக் கொள்ளலாம்!

தமிழகத்தின் முதல்வராக இருந்து மறைந்த அறிஞர் அண்ணா 1961ம் ஆண்டு, 'இலங்கைத் தமிழர்களுக்கு விளைவிக்கப்படும் அநீதியைத் தடுக்க ஐ. நா. தலையிடவேண்டும்" என்று தந்திகொடுத்ததை நினைத்துப்பார்க்கிறேன்.

## அகதிகளுக்கு அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சியிலுள்ள இரு அகதிகள் முகாம்களுக்கு மல்லாகம், கல்லாரை குடும்பநலத் திட்டச் சங்கம் ரொக்கப் பணமும், உடைகளும் அன்பளிப்புச் செய்துள்ளன.

மல்லாகம் குடும்பத் திட்டச் செயலாளர் திரு. ஜே. பி.குணரத்தினம் தலைமையில் கல்லாரை குடும்பநலத்திட்ட மகளிர் பிரிவுத் தலைவி செல்வி ச. பத்மாவதி, செயலாளர் செல்வி வ. சாந்தநாயகி, மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் நேரில் சென்று அன்பளிப்பை வழங்கினார்கள்.

கிளிநொச்சி முகாம் அகதிகளுக்கு 1270ரூபா ரொக்கப் பணமும், காந்தீய சேவா நிலைய முகாம் அகதிகளுக்கு உடைகளும் வழங்கப்பட்டன. [க]

## யாருடையது?

சுதுமலை வடக்கைச்சேர்ந்த திரு. இராசரத்தினம் ஜெயகுமார் என்பவர் நியூமார்க்கட்டிற்குள் ஒரு தேசிய அடையாள அட்டையைக்கண்டு எடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்.

○

உரும்பராய் சிவன் வீதியில் கண்டெடுக்கப்பட்ட மூன்று திறப்புக்கள் கொண்ட கோர்வையை திரு. எஸ். பஞ்சலிங்கம் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட வாகனங்களுக்கு

75% கடன் வசதி

எமது நிதி நிறுவனத்தால் பல வசதிகளுண்டு.

- பாவித்த வாகனங்களுக்குப் பெறுமதியில் நியாயமான கடன் வசதி.
- ஐந்து வருடங்களுக்குள் பாவனையிலுள்ள சகல பிரசித்த கார்களுக்கும் கடன் வசதி.
- கைத்தொழில், கமத்தொழில் உபகரணங்களை வாங்குவதற்கு கடன் வசதி
- புதிய யப்பானிய வாகனங்களை கொள்முதல் செய்யவும், இறக்குமதி செய்யவும் வசதி செய்கிறோம்.
- வீட்டுப்பாவனைப் பொருட்களை கொள்முதல் செய்து மாதாமாதம் பணம் செலுத்தும் கடன் வசதி.
- சகல நடவடிக்கைகளுக்கு முத்திரைச் செலவு அறவிடப்படுவதில்லை.
- பினான்ஸ் வசதிகளை பெறுபவரை அறிமுகப்படுத்துவோருக்கு கமிஷன் வழங்கப்படும்.

சென்றல் பினான்ஸ் கம்பெனி லிமிட்.,
250, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (போன்: 24360



# கைதடி அகதிகள் கைப்பணிப் பொருட்காட்சி

(சாவகச்சேரி)

அண்மைக்கால கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்து கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருப்பவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் பொருட்டும் அவர்களுக்கான வருமானத்தை ஈட்ட உதவியாகவும் ஏற்படுத்தப்பட்ட பொருட்காட்சியும் விற்பனையும் இம்மாதம் 28-ம், 29-ம், திகதிகளில் கைதடி அகதிகள் முகாமில் நடைபெறவுள்ளது.

அழகிய பூக்கள், பூச்சாடிகள், பாடசாலைப்பைகள, தலையணை உறைகள், விளையாட்டுப் பொருட்கள், அலங்கார ஜோடனைகள், விளக்குகள், உணவுப் பதார்த்தங்கள், பிளாஸ்ரிக் பைகள், தொப்பிகள் சிறுவர் உடுப்புகள் மரவேலைப் பொருட்கள், வாளிகள், வாழ்த்து மடல்கள் முதலான பொருட்கள் காட்சியில் இடம்பெறும்.

இவ்வாறு பல்வேறு விதமான பொருட்கள் அகதிகளின் கைவண்ணத்தில் உருவாகியுள்ளன. இவற்றினை கொள்வனவுசெய்து அகதிகளுக்கு வருமானத்தைப்பெற்றுக்கொடுக்குமாறு முகாம் நிர்வாகிகளின் சார்பில் அறவழிப் போராட்டக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (து)

## அகதிகளுக்கு நிதி உதவி

(அரியாலை)

வன்செயலால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வட இலங்கைக்குத் திரும்பி கிளிநொச்சி கருணாநிலைய முகாமில் தங்கியிருப்போரின் நல்வாழ்வுக்காக கொழும்பு திருமண்டலப்பேராயர் அதி வணக்கத்துக்குரிய சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை ரூபா 6 ஆயிரத்தை யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட் திரு. சாம். டி. ஹேவர்சிங்டன் அடிகளாருக்கு ஊடாக அனுப்பிவைத்துள்ளார். இந்த நிதி முகாம் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க)

## ரூபவாஹினியில் இன்று

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-02 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 'சிப்மேட்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-00 செய்திகள் (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-30 சிங்கள நிகழ்ச்சி
7-35 '240 ரெபர்ட்ஸ்' மீட்புப் படையொன்றின்சாகஸங்கள் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 '240 ரெபர்ட்ஸ்' தொடர்ச்சி
9-00 'லவ்போர்ட்' நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'லவ்போர்ட்' தொடர்ச்சி
10-15 நிகழ்ச்சிகள் முடிவு.

# கனகபுரத்தில் கொள்ளையர் கைவரிசை!

(கிளிநொச்சி)

துப்பாக்கி மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் கடையொன்றில் புகுந்த இரு இளைஞர்கள் அங்கிருந்தோரை ஆயுதமுனையில் பணயம் வைத்து நகைகளையும் மற்றும் பொருட்களையும் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் கடந்த செவ்வாயன்று கிளிநொச்சி கனகபுரம் 9-ஆம் பண்ணையில் இடம்பெற்றது. இக்கொள்ளை தொடர்பாக எஸ். சேனாதிராசா என்பவர் கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

சம்பவதினம் இரவு 11 மணியளவில் பூட்டியிருந்த கடைக் கதவைத்தட்டிய இக்கொள்ளையர் தம்மையும் கடையில் படுத்திருந்த நாகமணி என்பவரையும் துப்பாக்கிமுனையில் பயமுறுத்திக் கடையிலிருந்த 7 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகையையும் மற்றும் சில பொருட்களையும் கொள்ளையடித்துச்சென்றனர் என சேனாதிராசா புகாரில் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிப் பொலிசார் இது தொடர்பாகப் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

## வங்கி ஊழியர் உதவி

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் பிரதானவீதியிலுள்ள மக்கள் வங்கிக்கிளையில் பணியாற்றியவரும், மானிப்பாயில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் போது அகாலமரணமானவருமான சுழிபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி மயில்வாகனத்தின் குடும்பத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் வங்கிகளின் ஊழியர்கள் சார்பில் சுமார் 20ஆயிரம் ரூபா சேகரித்து அண்மையில் கையளிக்கப்பட்டது.

## கிராண்ட்பாஸில் நவராத்திரி விழா

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ், டிவாஸ்லேன் அருள்மிகு ஞான பைரவர் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு நவராத்திரி விழா வெகுசிறப்பாக நடைபெற்று வருகிறது.

தேவஸ்தானப் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சாம்பசிவ சரவணபவக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவின் பத்தாம்நாள் மாலை மானம்பூ உற்சவம் நடைபெறும். (அ)

## கோரிக்கை

(மாவிட்டபுரம்)

வசாவிளான் சென். ஜேம்ஸ் வீதியின் ஊடாக பாரவாகனங்கள் செல்வதை தடைசெய்யுமாறு வசாவிளான் - பலாலி தெற்கு சென். ஜேம்ஸ் சன சமூகநிலையம் கோரிக்கைவிடுத்துள்ளது.

மேற்படிவீதி மிகவும் பழுதடைந்த நிலையிலிருப்பதற்கு பாரவாகனங்கள் இவ்வீதியால் செலுத்தப்படுவதும் ஒரு காரமாக இருப்பதால் பாரவாகனங்கள் இவ்வீதியால் செல்வதை தடைசெய்யுமாறுயாழ், அபிவிருத்திச்சபையிடமும், அபிவிருத்திச்சபை மயிலிட்டி உபஅலுவலகத்திடமும் மேற்படி சன சமூக நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் பல காலமாக பழுதடைந்துள்ள இவ்வீதியை செப்பனிடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இரத்தினபுரத்தில் விநாயகராலயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் அருள்மிகு சிவசித்திவிநாயகர் ஆலய அத்திபாரக்கல் நாட்டுவைபவம் எதிர்வரும் 21ம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இரத்தினபுரம் இந்துமாமன்றத் தலைவரும் ஆலய பரிபாலன சபைத் தலைவருமான நா. கோபாலநாதன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் இந்துசமயக்காவலர் குருகுல அதிபர் வே. கதிரவேலு தொழில் அதிபர் க. கனகராசா, உருத்திரபுரம் சிவன் தேவஸ்தானத் தலைவர் ப. கணேசபிள்ளை, புலவர் செல்வி. விசாலாட்சி ஆகியோர் கலந்துகொண்டு பேசுவர்.

இவ் வைபவம் சம்பந்தமான நூலொன்றும் அன்றுவெளியிடப்படுவதுடன் சமயக் கருத்தரங்கு, பண்ணிசை ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பம்சமாக இடம்பெறும். சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக்குருக்கள் கிரியைகளை நடத்திவைப்பார். (அ)


# மாபெரும் காணி விற்பனை

## நுணுவில் (கண்டி வீதி)

21 வீடு கட்டக்கூடிய காணிகள் 21

சுலபமான மாதாந்த தவணை கட்டண முறையில் காணி உரிமையாளராகலாம்.

மிக சமீபத்தில் கல்லூரிகள், தபால் அலுவலகம், சனசமூக நிலையம், வைத்தியசாலைகள் அமைந்துள்ளன.

அலுவலகத்தில் முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்




மேலதிக விபரங்களுக்கு:
காணிப்பிரிவு

TFC

### த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23680

# இன்றைய பலன்

புரட்டாதி 24-ம் திகதி
திங்கட்கிழமை
(10-10-83)

மேடம்: சிறியவிடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும் உள்வீட்டிலேயே பூசல்கள் தலை தூக்கும் வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும் தொல்லைகள் தலை தூக்கும் உடலைப் பாதுகாக்கவும்.

இடபம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சி இடம்பெறும் எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும் கண்ணியம் சேரும் கௌரவம் உயரும்.

மிதுனம்: நண்பர்களே உங்கள்முன்னேற்றத்திற்கு தடைகல்லாக அமைவார்கள் மொட்டைக் கடிதமொன்று சிறிய பரபரப்பை ஏற்படுத்தும் தொழில் துறையில் நஷ்டம் ஏற்படலாம்.

கடகம்: பரம்பொருளின் அருளுக்கு இடமுண்டு பரோபகாரசிந்தை தலை தூக்கும் பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர் அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: திருப்திகரமான மாற்றங்களுக்கும் இடமுண்டு நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப் படுவார்கள் திறமையான நடவடிக்கையின் மூலம் பணலாபத்தைத்தேடிக் கொள்வீர்கள்.

கன்னி: புதுமையான சம்பவங்கள் நடைபெறும் சிலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

துலாம்: பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும் அதிகசிந்தனைக்கு இடம் அளியாது மனதைப் பாதுகாக்கவும்.

விருச்சிகம்: பொருளாதாரத்தில் எதிர்பாராத நெருக்கடி தோன்றும் புதிய முதலீடு விட்டுச்செய்யும் தொழிலைப் பின்போடவும் கடமையாற்றுமிடத்தில் போட்டா போட்டியைத் தவிர்த்துக்கொள்ளவும்.

தனு: இலட்சியப்பாதையில் வீறுநடை போடுவீர்கள் எதிர்பாராத பொருள் வரவுக்கும் இடமுண்டு கடற்றொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்புக் கிடைக்கப்படலாம்.

மகரம்: மனப்போராட்டங்கள் அதிகரிக்கும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் இதன் மூலம் கைகலப்பும் ஏற்படலாம் வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்கவும்.

கும்பம்: வாகன நலனுடன் வாழ்விலும் சுகம் காணுவீர் இதயப்படுதாவில் இன்பக் கூத்து நீண்டநாள்எதிர்பார்த்த நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்கும் சந்தர்ப்பம் உருவாகும்.

மீனம்: எழுத்தாளர்களுக்கு எழுச்சிமிக்க தினம் புதியகண்டுபிடிப்புக்களுக்கான கருவூலம் கிடைக்கலாம் வாழ்க்கையில் சன்மானம் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
கூ. வேலுப்பிள்ளை

---

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**ராஜா** [யாழ்.நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா
தங்கவேலு, நம்பியார்
**நம் நாடு** (கலர்)

**லதா** (கோண்டாவில்)
தினசரி 2-30, 6-30
எம்.ஜி.ஆர். - ஜெயலிதா
**தேடிவந்த மாப்பிள்ளை**

**சாந்தி** யாழ்நகர்
10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**உத்தமன்**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30,2-30,6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
சிவாஜி - சாவித்திரி
**கர்ணன்**
(கலர்-புதியபிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
**ENTER THE DRAGON**
Limited Engagement
For the last time in Jaffna
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்
சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் கடைசி
தடவையாகத் திரையிடப்
படுகிறது.
Next :
IT COULD HAPPEN TO YOU
(A Film on V. D.)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00.
4-30, 7-00
Sean Connery
Jene Hackman in
**The Bridge Too Far**
(War Film)
From 12-10-83 to 14-10-83
NORTH SEA HIJACK

**தடைசெய்யப்படுமா?**

**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாகி வெளியேற்றப் படும் அவன் சில நண்பர்களைச் சேர்த்து, நவீன ஆயுதங்களையும் சேகரித்து இராணுவ முகாமையே நிர்மூலமாக்குகிறுன்.

## பரதநாட்டிய வகுப்புகள்

அனுஷா தர்மராஜாவின் (சென்னை கலா க்ஷேத்ரா டிப்ளோமா) 'நாட்டிய க்ஷேத்திரா' யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் இயங்கவுள்ளது. விபரங்களுக்கு:-

**அனுஷா தர்மராஜா**
''ரகுபதி'' (ஆரம்ப நீதிமன்றத்திற்கு எதிராக),
கோட் ரோட்,
மல்லாகம். (9152)
''அம்பாள் அகம்''
மருதனுமடம், இணுவில்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி

எமக்கெனவே உழைத்த பெருந்தகையை
பிரிந்தோமே
தனக்கென வாழ்ந்திடாச் சான்றோனை
இழந்தோமே

**மாணிக்கம் அந்தோனிப்பிள்ளை**

உறக்கம்: 1982-10-10

ஓராண்டு தானு ஒழிந்தது
நீ இல்லா இக்காலம்
ஒரு கோடி யுகங்கள் அன்றோ
நினது வெறுமையை உணரும்

அன்புத் தம்பி அருள் குடும்பத்தினர்,
தாய், தந்தையர், மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை
இறைஞ்சுகிறோம்.

உற்றூர், உறவினர்.
வள்ளுவர்புரம், தையிட்டி. 9200

## RADIO AND ELECTRONICS ENGINEERING COURSE

வார இறுதி வகுப்புகள்

**யாழ் நகரில்**

சகல தொழில் நுட்ப வசதிகளுடனுன
எமது நவீன ஆய்வுகூடத்தில்
கொழும்பில் தன்னிகரற்றுத் திகழ்ந்த
ஆசிரியரிடமிருந்து கற்று நிறைபலன் பெற
நாம் அளிக்கும்

**PART I — 6 மாதம்**

★ RADIO பழுதறப் பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும்

★ TAPE RECORDER
★ H: F: STEREO AMPLIFIER
★ RADIO CONTROL
★ TRANSFORMER

} இவற்றோடு இன்னோரன்ன பல இலத்திரனியற் கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புக்குரிய தெளிவான THEORY AND PRACTICALSம் அவற்றைப் பாரிய முறையில் உருவாக்கவும் பழுது பார்க்கவும்

★ DIGITAL ELECTRONICS: THEORY and PRACTICALS
★ ஒளியின் தாக்கத்தால் இயங்கும் இலத்திரனுக்குரிய கருவிகளை உருவாக்கவும்
★ பயிற்சி முடிவில் எம்மால் இலவசமாக வழங்கப்படும் உதிரிப்பாகங்களைக் கொண்டு உதவி எதுவுமின்றித் தாமாகவே வானொலியொன்றைச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவதோடு அவற்றைப் பாரிய முறையில் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தையும் பெற்றுக்கொள்வர். பரீட்சை முடிவில் தேறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

**PART II — 3 மாதம்**

★ T V
★ VIDEO RECORDERS
} Theory and Practicals பழுது பார்த்தல்

இப்பாட நெறி ஆரம்பத்தில் இருந்து புகட்டப் படுவதால் G. C. E. (O/L மாணவர்களும் விஞ்ஞானம் பயிலாத மாணவர்களும் கற்க முடியும். பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்,

கட்டணம்: PART I - ரூபா 1500/-
PART II - ரூபா 1000/-

**ஆரம்பம்: 22-10-1983**

**CANTABIA INSTITUTE**
21, MAIN STREET. JAFFNA.
T' PHONE; 24201



## அளவைக்கு செல்ல விரும்பாத நில அளவை உத்தியோகத்தர் மிருசுவிலில் தற்கொலை!

(மட்டுவில்)

இனக்கலவரத்தை தொடர்ந்து, 'அளவை'யிலிருந்து சொந்த ஊருக்கு வந்த நில அளவை உத்தியோகத்தரை அவரது மனைவி மீண்டும் வேலைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டதால் மனமுடைந்து நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மிருசுவில்வடக்கைச் சேர்ந்த 35 வயதான நம்சிவாயம் செல்லையாவின் மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு க. சின்னத்தம்பி மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரான செல்லையா அளவை எனும் இடத்தில் நில அளவை உத்தியோகத்தராகக் கடமையாற்றிவந்தார் என்றும் கடந்த கலவரங்களின்போது இவர் உயிர்தப்பி ஊர்வந்து சேர்ந்தார் என்றும் இப்பொழுதுநாடு வழமைக்குத் திரும்பிவிட்டதால் மீண்டும் வேலைக்குப் போகும்படி மனைவி கேட்டுக்கொண்டதாகவும் இதனால் அவர் விரக்தியடைந்து சம்பவதினம் நச்சுத்திராவகத்தை அருந்தினாரென்றும் விசாரணையில் தெரியவந்தது.

சார்ஜண்ட் திரு. சூரியப்பிரகாசம் சாட்சிகளை ஆஜர்செய்தார். இறந்தவரின் மனைவி செல்லையா சிவகாமசுந்தரி உட்பட பலர் சாட்சியமளித்தனர். சாட்சியங்களைப் பதிவுசெய்த மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## அகதிகளுக்குப் பயிற்சி வகுப்பு

(சாவகச்சேரி)

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் பன்னவேலைப்பயிற்சி வகுப்பு கைதடி அகதிகள் முகாமில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பில் 25 பெண்கள் பன்னவேலைப் பயிற்சி பெற்றுவருகின்றனர்.

## இப்படியும் நடக்கிறது

தமிழ்நாட்டில் ஐந்து லட்சம் பிரதிகள் விற்பனையாகும் 'தினத்தந்தி' பத்திரிகையில் வெளிவந்த செய்தி இது:

''இலங்கைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணியின் பெயரை சேலம் அருகேயுள்ள பள்ளிக்கூடத்திற்கு தமிழ்நாடு சபாநாயகர் திரு. இராசாராம் சூட்டினார்.

''சிங்கபுரம் என்ற கிராமத்தில் ஒரு லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட பள்ளிக்கூடக் கட்டிடத்தை சபாநாயகர் இராசாராம் திறந்து வைத்தார். அந்தக் கட்டிடத்துக்கு இலங்கைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணியின் பெயரைச் சூட்டினார்.

''காலையில் இருந்து நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டாலும் என் எண்ணம் எல்லாம் இலங்கையில் நடக்கும் பேச்சுவார்த்தை நல்லபடியாக நடக்கவேண்டும் என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறது. வரும்போதே இலங்கை விடுதலைப்புலி குட்டிமணியின் பெயரை ஒரு பள்ளிக்கூடத்துக்கு சூட்டவேண்டும் என நான் எண்ணினேன். அதற்கு பொருத்தமான இடம் எது என்று அதிகாரிகளை கேட்டேன். அவர்கள் சிங்கபுரத்தை தேர்ந்து எடுத்தார்கள். சிங்கிபுரத்துக்கு விடுதலைப்புலி குட்டிமணியின் பெயரைச் சூட்டுவது மிகவும் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்'' என்று தமிழ்நாடு சபாநாயகர் திரு. இராசாராம் பாடசாலை பெயர் சூட்டும் வைபவத்தில் தெரிவித்தார்.

— ஊடுருவி

## தமிழில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையை ஆண்ட தேசாதிபதி ஆதரிக்கவில்லை. தாம் மொழிபெயர்த்த 'அங்காதிபாதம்' என்ற மருத்துவ நூலை அச்சிட பண உதவிசெய்யும்படி இலங்கைத் தேசாதிபதிக்குக் கடிதம் எழுதியபோது, ''அமெரிக்க மிஷன் நடைமுறையில் கொண்டிருக்கும் ஆங்கிலத்தை தவிர்க்கும் கொள்கை பேராபத்தானதுந் தற்கொலைக் கொப்பானது'' எனத் தேசாதிபதி மறுமொழி அனுப்பினார். இருந்தும் தளர்ந்து போகாது டாக்டர் கிறீன் பின் வாங்காமல்விடாமுயற்சியுடன் இந்நூலை வெளியிட்டார். இதன்பின் டாக்டர் கிறீனின் திறமையைக் கண்ட அரசாங்கம் தமது பிரசுரங்களைத் தமிழில் மொழிபெயர்க்கவும், அச்சேற்றவும் கிறீன் வைத்தியரின் உதவியை நாடியது. அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையின் பொறுப்பை இவரிடம் அளித்தது. இதிலிருந்து டாக்டர் கிறீன் மருத்துவத் துறையில் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்த திறமையான பணியின் சிறப்பு தெற்றென விளங்குகிறது.

இற்றைக்கு நூறு ஆண்டுகட்குமுன் ஆங்கிலத்தில் சிந்தித்து, பேசி, அதுவே அறிவுக்கு அறிகுறியெனவும், பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி தாய்மொழியில் கற்பித்தால் போதுமெனவும் நினைத்து நிம்மதியாக ஆங்கில நிழலிலே உறங்கிய அன்றைய தமிழ்ச்சமுதாயத்திலே, ஆரம்பக்கல்வி மட்டுமல்ல, அறிவியற்கலையை, மருத்துவக் கலையை, மருத்துவக்கல்வியை தாய்மொழியில் கற்பிக்கலாமெனத் துணிந்துகூறி அதனைச் சாதனையிலும் காட்டினார் டாக்டர் கிறீன்,

மருத்துவக்கல்வியைத் தமிழில் கற்பித்து, தகுதிவாய்ந்த மருத்துவர்களை உருவாக்குவதில் வெற்றிகண்ட கிறீன் வைத்தியரின் பணியை நாம் 'காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது' என்ற பெரும் மனதுடன் போற்றுதல் வேண்டும். இம்மகத்தானசேவையை இன்று தமிழ் அறிஞர் பலர் மனமுவந்து பாராட்டுகின்றனர்.

## நகை மோசடி, திருட்டு: பெண்ணுக்கு ஒத்திவைத்த சிறை

(யாழ்ப்பாணம்)

நகைகளை வாங்கி நம்பிக்கை மோசடி செய்ததாகவும் 27ஆயிரம்ரூபா பெறுமதியான தாலிக்கொடியைக் களவாடியதாகவும் பெண்ஒருவர்மீது யாழ். பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் யாழ். நீதிமன்ற நீதவான் எஸ், நாகராசா இருகுற்றங்களுக்கும் தலா 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருடக் கடூழியச்சிறைத்தண்டனைவிதித்து எச்சரிக்கை செய்தார்.

கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த வசந்தகுமாரி யோகநாதன் என்பவருக்கே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் கடந்த மேமாதப்பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்து நாகேஸ்வரி விக்னேஸ்வரன் என்பவருக்குச் சொந்தமான 6,300 ரூபா தங்கச்சங்கையையும், காப்பையும் வாங்கி நம்பிக்கை மோசடிசெய்ததாகவும், அதே வீட்டில் 27,000 ரூபா பெறுமதியான தாலிக்கொடியைக் களவாடியதாகவும், யாழ். பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (மாஅ)

## வவனியாவில் கடும் வரட்சி

(வவனியா)

வவனியாவில் தொடர்ந்து வரட்சி நிலவுவதால் குடிநீருக்குப்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வவனியா நகரில் குடிநீருக்குப் பெரும்கிராக்கி ஏற்பட்டுள்ளது.

நகர்ப்புறச்சுற்று வட்டாரத்தில் கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது.

சில இடங்களில் கிணறுகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

## ரூ. 18,000 நகைகள் மீட்பு

(வேலணை)

நீண்ட காலமாகப் பொலிஸாரினால் தேடப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த யோகராசா என்பவரே கைது செய்யப்பட்டவராகும். இவரிடமிருந்து பதினெட்டாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## மாவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டார்.

இவரது வீட்டில் இருந்த தஸ்தாவேஜுகள் சிலவற்றையும் ஆயுதப்படையினர் எடுத்துச் சென்றனராம்.

இவர் எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பது இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியப்படுத்தப்படவில்லை. (மா)

## முகமூடி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்றும் வீட்டுக்காரர்பொலிசில் தெரிவித்துள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான இருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப்பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

வேதநாதன் என்பவருக்கு 7 கிறிஸ்கத்திக் குத்துக்காயங்களும், அவரது சகோதரருக்குப் பலத்த அடி காயங்களும் காணப்படுவதாகவும் கிறிஸ்கத்திக் குத்துக்காயங்களுக்குள்ளானவர் அபாயகரமான கட்டத்தைத் தாண்டிவிட்டதாகவும் ஆஸ்பத்திரிவட்டாரங்கள் தெரிவித்தன. இக்கொள்ளைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்கின்றனர். (மா)

## அமெரிக்க செனட்டர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வாகுமென்று அமெரிக்க செனட்டர்களும், வெளியுறவு அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்துள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் நியுயோர்க்கில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஐ. நா.வின் 38வது கூட்டத்தொடரில் கலந்துகொள்ள நியுயோர்க் சென்ற தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ரி. இராமச்சந்திரனையும், இந்தியாவின் ஏனைய உறுப்பினர்களையும் திரு. அமிர்தலிங்கம் நியுயோர்க்கில் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றிக் கலந்துரையாடினார். (வெ)

## தென்கொரிய 4 அமைச்சர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தன. இச்சம்பவம் குறித்து அமெரிக்கா அதிர்ச்சியடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### இலங்கைவந்த வட-கொரியாக் கப்பல்

இதேவேளை பர்மாவிலிருந்து கொழும்பு வந்து கொண்டிருந்த வட-கொரியாக் கப்பலொன்று பாணந்துறைக்கு அண்மையில் வைத்து, இலங்கை அரசினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

வடகொரியாவிலிருந்து புறப்பட்ட இந்தக்கப்பல் பர்மா சென்று அங்கிருந்து கொழும்புத்துறைமுகத்துக்கு வந்து கொண்டிருந்தது. இக்கப்பல் பாணந்துறைக்கு அண்மையில் கடற்பிராந்தியத்தில் வந்துகொண்டிருந்தபோது அதனை வெளியேற்ற இலங்கை அரசு உத்தரவிட்டிருந்தது.

### விசாரணைக்குழு விரைவு

இச்சம்பவம் குறித்து முழுஅளவிலான விசாரணையை நடாத்த தென்கொரியாவின் விளையாட்டுத்துறை அமைச்சர் தலைமையிலான குழுஒன்று பர்மா வரவுள்ளது. இச்சம்பவத்தையடுத்து அவசர அவசரமாக கூடிய தென்கொரிய அமைச்சரவை இக்குழுவை பர்மாவுக்கு உடனடியா அனுப்புவது பற்றி முடிவெடுத்தது. (கு)

## 3-வது கிரிக்கெட் டெஸ்ட்

## பாக். 322

## இந்.245, 99—1

(நாக்பூர்)

பாகிஸ்தானுக்கும், இந்தியாவிற்குமிடையே நாக்பூரில் நடைபெற்று வரும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 4-வது நாளான நேற்று பாகிஸ்தான் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 322 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 99 ஓட்டங்களை எடுத்திருந்தது. சுனில் கவாஸ்கர் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை எடுத்துள்ளார். (வெ)

## மரண அறிவித்தல்

### சோமுப்பிள்ளை செல்வரத்தினம்

மகாதனை தெல்லிப்பழையைச் சேர்ந்த சோமுப்பிள்ளை செல்வரத்தினம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு) காலமானார். இவர் மீனும்பிகையின் அன்புக்கணவரும், கங்காதரன் (பொறியியலாளர், லண்டன்), யசோதா (தபால் தந்திதிணைக்களம், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. சண்முகலிங்கம், (பொறியியலாளர், லண்டன்), அவர்களின் மாமனாரும், தேவிகா, குமரேசன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக (10-10-83) இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை இல்லத்திலிருந்து கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

9206

## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம்

உடுவிலைச் சேர்ந்த ஆசீர்வாதம் ஜேர்மனியில் காலமானார். இவர் பாலச்சந்திரன் தம்பையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வவுனியா யசிந்தாவின் அன்புக்கணவரும், திரு. திருமதி பத்தினாதன் மரியம்மா அவர்களின் அன்பு மருமகனும், திரு. அப்புத்துரை, வவனியா லக்கி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் யோசேப், திருமதி இராசரத்தினம்(ஆசிரியை), புங்குடுதீவுமகாவித்தியாலய ஆசிரியை திருமதி வசந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கைக்குரிய சகோதரி கத்பேட் பெனடிற்ரா இருவையாறு திருமதி ஞானப்பிரகாசம், திருமதி ஜெயநாயகம், செல்வன் அலோசியஸ், செல்வி ரெசிற்ரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (10-10-1983) இன்று திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து வவுனியா, றம்பைக்குளம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்கனம்
அன்பின் மனைவி யசிந்தா ஆசீர்வாதம்.

9205

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.